
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1208**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# சென்னை இதழியல் கல்வி நிறுவனம்!

## போலிகளைப் புறந்தள்ள; உண்மைகளை உரத்துப்பேச...

**திராவிட மாடல் அரசு**

**நீரை.மகேந்திரன்**

**172**

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

நொடிக்கு நொடி மாறிவரும் தொழில்நுட்ப யுகத்தில், அதைச் சரியாகக் கையாள வேண்டும் எனில், அடுத்தடுத்த தலைமுறையினர் தங்களை அதற்குத் தயாராக்கிக்கொள்ள வேண்டும். தொழில்நுட்ப மாற்றங்களைக் கற்றுக்கொள்வது மட்டுமல்ல; அரசியல் மாற்றங்களுக்கும் அதுதான் அடிப்படையானது என்பதை, கடந்த தேர்தலில் கண்கூடாகப் பார்த்தோம்.

அந்த வகையில், ஊடகத் துறையில் ஆர்வம் மிகுந்த இளம் திறமையாளர்களை ஊக்குவிக்கவும் இதழியல் மற்றும் ஊடக ஆய்வியலில் தரமான கல்வியை வழங்க வேண்டியும், தமிழ்நாடு அரசு உருவாக்கிய நிறுவனம்தான், ‘சென்னை இதழியல் மற்றும் ஊடகவியல் கல்வி நிறுவனம்’ (*Institute of Journalism and Media Studies*).

2025-26 ஆம் ஆண்டுக்கான, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் மானியக் கோரிக்கையின்போது, இதழியல் துறையில் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஊடகக் கல்வி மேம்பாட்டுக்கு ஒரு முதன்மையான கல்வி நிறுவனத்தை, தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்க உள்ளதாக அறிவித்தார், கழகத் தலைவர் அன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், 2025-2026 கல்வி ஆண்டிலேயே ‘இதழியல் மற்றும் ஊடகவியல் கல்வி நிறுவனம் (*Institute of Journalism and Media Studies*)’ தொடங்கப்படும் என்றும் அறிவித்தார். குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், இந்தக் கல்வி நிறுவனம் நடைபெறும் எனவும் அறிவித்தார்.

இந்தக் கல்வி நிறுவனம் தொடங்குவதற்காக 7.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக இதற்கென வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு, பாடத் திட்டங்களை உருவாக்கியதுடன், சென்னை கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில் இடம் தேர்வு செய்யவும் துணை நின்றது.

### சர்வதேச ஒப்பந்தங்கள்

இந்த நிறுவனத்தில் இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பு (*Post Graduate Diploma in Journalism*) 2025- 2026 கல்வியாண்டு முதல் தொடங்கவும் திட்டமிடப்பட்டது. குறிப்பாக, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழியிலும் இங்கு பாடங்கள் பயிற்றுவிக்கப்படும்.

அச்சு, தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் பணிபுரிவதற்கான திறமையை வளர்த்துக்கொள்ளும் வகையில், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டன. சர்வதேசக் கல்வி நிறுவனங்களுடனும் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்து, மாணவர் சேர்க்கை நடத்தியது.

அதைடுத்து, 2025 ஆகஸ்ட் அன்று, சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தை கோட்டூர்புரத்தில் தொடங்கிவைத்து, இக்கல்வி நிறுவனத்தில் முதுநிலை பட்டயப் படிப்பில் முதலாம் ஆண்டு சேர்க்கை பெற்ற மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடினார் நம் கழகத் தலைவர்.

இந்நிறுவனத்தில் அச்சு, தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் பணிபுரிவதற்கான திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

பல்லூடக வகுப்பறை, வலை ஒலி, படத் தொகுப்பு அறை, ஒருங்கிணைந்த செய்தி அறை, வீடியோ மற்றும் ஸ்டுடியோ கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட வசதிகளும், வெளி மாவட்ட மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயிலும் வசதியும் உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டு சுமார் 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர்.

தவறான தகவல்களைக் கண்டறிந்து புறந்தள்ளவும், தரவுகளின் அடிப்படையில் செய்திகளை வழங்கவும் இதழாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது, பணி செய்துகொண்டிருக்கும் இதழாளர்களுக்குப் புதிய சவால்களையும் யதார்த்த நிலைகளையும் சமாளிக்கும் வகையில், சமகாலத்துக்கு ஏற்ற பயிற்சி அளிப்பது, நெறி சார்ந்த உயர்ந்த தரம், துல்லியம், நேர்மை, பொறுப்புடைமை ஆகியவற்றை உயர்த்திப்பிடிக்கும் இதழாளர்களை உருவாக்குவது என்பதுதான் இந்த இதழியல் கல்வி நிறுவனத்தின் நோக்கம். இந்தக் கல்வி நிறுவனம் உருவாக்கும் மாணவர்கள், தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்யட்டும். அதுவே, ‘திராவிட மாடல்’ அரசின், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் எதிர்பார்ப்பு.

...சாதனை தொடரும்



‘சன் நியூஸ்’ தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் அவர்கள், தனக்கு ‘ராம்நாத் கோயங்கா விருது’ மூலம் கிடைத்த பரிசுத் தொகை ரூ.1 இலட்சத்துடன் ரூ.10 ஆயிரம் சேர்த்து, ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை இந்தக் கல்லூரிக்கு வழங்கினார். இதழியல் துறையில் முன்னோடியாக விளங்கிய தினமணி முன்னாள் ஆசிரியர் இராம.சம்பந்தம் நினைவு அறநல்கை அமைக்க அந்தத் தொகையை வழங்கினார்.







**சேர்க்கை விவரம்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப் படிப்பு பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்சம் 50 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். BC/BCM/MBC/DNC/SC/SCA/ST ஆகியவர்களுக்குப் பட்டப் படிப்பில் தேர்ச்சி போதுமானது.

வயது வரம்பு : விண்ணப்பிக்கும் ஆண்டில் ஜூலை 1-ஆம் தேதியன்று 41 வயதைக் கடந்திருக்கக் கூடாது. கல்விக் கட்டணம் முதல் அரையாண்டிற்கு ரூ.5,000 மற்றும் இரண்டாவது கல்வியாண்டிற்கு ரூ.5,000.

> **நெறி சார்ந்த உயர்ந்த தரம், துல்லியம், நேர்மை, பொறுப்புடைமை ஆகியவற்றை உயர்த்திப் பிடிக்கும் இதழாளர்களை உருவாக்குவது என்பதுதான் இந்த இதழியல் கல்வி நிறுவனத்தின் நோக்கம்.**

## வதந்திகளைப் பரப்புவதுதான் முழுநேர வேலையா?

தமிழ்நாட்டில் விஜய் ஆட்சி அமைத்த நாள் முதல், ஆக்கபூர்வமான அறிவிப்புகள் எதையும் இதுவரை வெளியிடவில்லை. பல மணி நேர மின்வெட்டு, கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் என இரண்டு வாரத்திலேயே சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி கிளம்பியுள்ளது. இதில்கூட த.வெ.க. ஆட்சி கவனம் செலுத்தாத நிலையில், பொய்ச் செய்திகளைப் பரப்பி, மக்களை மடைமாற்றும் வேலைகளில்தான் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக, ‘த.வெ.க. ஆட்சிக்கு வந்தபின்புதான் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை வாட்ஸ்அப் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவிப்பு, சென்னை மாநகராட்சியால் தொடங்கப்பட்டுள்ளது’ என்று ஒரு பொய்யைப் பரப்பி வருகிறார்கள். இது குறித்தான அறிவிப்பு, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதமே இதற்கு முந்தைய தி.மு.க. ஆட்சியால் தொடங்கப்பட்டுவிட்டது. அதன்படி, தமிழ்நாடு அரசு வாட்ஸ்அப் நிறுவனத்துடன் கைகோத்து, பிறப்பு, இறப்பு சான்றிதழ்களைப் பெறுதல் உட்பட 50 சேவைகளை அப்போதே தொடங்கியுள்ளது.

அதேபோல, த.வெ.க. ஆட்சிக்கு வந்தவுடன்தான் பேருந்து ஓட்டுநர்கள், பணியின்போது செல்போன் பேசத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகப் பொய் பரப்புகிறார்கள். 2022-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமே தமிழ்நாடு அரசு பேருந்து ஓட்டுநர்கள் பணியின்போது, செல்போன் பயன்படுத்த தடை விதித்து அறிவித்துவிட்டது. மேலும், ஓட்டுநர்கள் பணியின்போது சட்டைப் பையில் செல்போன் வைத்திருக்கக் கூடாது. அதனை நடத்துநரிடம் ஒப்படைத்துவிட்டு, பணி முடிந்த பின்னர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இதனையடுத்து, 2024-ஆம் ஆண்டு டிசம்பரில், அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் பணியின்போது செல்போன் பேசினால், 29 நாட்கள் பணியிடை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும், சென்னை மாநகராட்சி அதிகாரிகள், இனி பயோமெட்ரிக் முறையில் வருகைப்பதிவு செய்ய வேண்டும் என்று த.வெ.க. அரசு புதிய நடைமுறையைக் கொண்டு வந்துள்ளதாகவும் பொய்ச்செய்தி பரப்பப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு மே மாதத்திலேயே, ‘சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பயோமெட்ரிக் முறை மூலம் வருகைப் பதிவேடு பின்பற்றப்படும்’ என்று மேயர் பிரியா அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



இ.செந்தில்குமரன்



### பத்திரிகையாளராகப் பாராட்டுப் பெற்ற தருணம்!

2018-ஆம் ஆண்டு, திருச்சி முக்கொம்பில் இருந்து கடலூர் வரை ஏழு நாட்கள் காவிரி உரிமை மீட்பு நடைப்பயணம் மேற்கொண்டார், தி.மு.கழகத் தலைவர் அவர்கள். அந்த நாட்களில், தனியார் தொலைக்காட்சியின் நேரலை ஒளிப்பதிவாளராகப் பங்குபெற்று, பிரத்தியேகமான நேர்காணல் எடுத்து, அதற்கான பாராட்டைப் பெற்ற தருணம் இது. “செந்தில், ஏழு நாட்களும் முழுவதுமாக என் உடன் இருந்து நீங்கள் செய்த நேரலை ஒளிப்பதிவு மிகவும் சிறப்பாக இருந்தது” என்று முத்தமிழறிஞரின் மைந்தன் என்னைப் பாராட்டியதை மறக்க முடியாது. எனது 25 ஆண்டுக்கால ஊடகப் பணியில் இந்தத் தருணத்தை மிகவும் மதிப்புமிக்கதாக உணர்கிறேன்.

– இ.செந்தில்குமரன்,
ஊடகவியலாளர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருக

### சிங்கப்பூரில் பிரம்மாண்ட வரவேற்பு!

1929-ஆம் ஆண்டு டிசம்பரில், தந்தை பெரியார் மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சிங்கப்பூருக்கு ரயிலில் பயணம் செய்தார். சிங்கப்பூர் ரயில் நிலையத்திற்கு, அந்நாட்டில் வசித்த தமிழர் மட்டுமல்லாது, பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களும் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர். ரயில் நிலையத்திற்கு வெளியில், 200 கார்கள் வரிசையாக நின்றன. மிகுந்த சிரமப்பட்டு, வெளியே அழைத்துவரப்பட்டார். 120 கார்கள் பெரியாரைப் பின்தொடர்ந்து சென்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900